# கிருபையுள்ள வார்த்தை ®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

| Vol - 19 | August ஆகஸ்ட் | 2018 |
| --- | --- | --- |
| ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/- |






## நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி உன் தேவனுக்கு பயப்படுவாயாக;நான் கர்த்தர்

லேவி 19:32


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| முதிர்வயதுள்ளவரை கனம்... | 3 |
| முதிர் வயதிலும் கனி தந்து... | 6 |
| ரூத் : அன்பின் சரித்திரம் | 7 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,
**P. பேமி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
6 மணி முதல் 6-30 மணி

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா.** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்


ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா.** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

Advanced Bible Correspondence
Courses Available in English






**கிருபையுள்ள வார்த்தை**
**கனம் பண்ணுதலை போதிக்கும்**
**கனமுள்ள வார்த்தை**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International Vol. 96**

# முதிர்வயதுள்ளவரை கனம் பண்ணுங்கள்!

P.C. பிலேமோன் ராஜா



அன்பான வாசகர்களுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்!

ஆகஸ்ட் மாதம் 21ம் தேதியை ''உலக முதிர்வயதுள்ளவர்கள் தினம்'' என்று அனுசரிக்கின்றனர்; ஆகையால் நாம் இந்த மாதம், முதிர்வயதுள்ளவர்களைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது என அறிந்துகொள்வோம்.

இந்த உலகத்தில், மிகப்பழமையான புத்தகங்களில் நமது பரிசுத்த வேதாகமமும் ஒன்று. ஏறக்குறைய 4000 ஆண்டுகள் பழமையானது. இன்றைய காலகட்டத்திலும், இனிவரும் காலகட்டத்திற்கும் அது பொருந்துவதாக இருப்பதால், என்றும் இளமையுடன் இருக்கிறது என்பது பிரமிப்பான ஒன்று. அப்படிப்பட்ட வேதகாமம், முதிர்வயதுள்ளவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று, அதாவது, 'அவர்களை எப்படி நடத்த வேண்டும்' என்று போதிக்கிறது என்பதை ஆராய்வோம்!

### 1. கனம் பண்ணுங்கள்

**லேவி 19:32** "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்."

வேதாகமம், முதிர்வயதானவர்களை கனம்பண்ணும்படி கூறுகிறது. கனம்பண்ணுதல் என்றால் என்ன ? மரியாதை செலுத்துதல்! பெரியவர்களை மதித்தல் என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் ஒரு காரியமாக பொருட்படுத்துவதே இல்லை. பெரியவர்களை, "அறுவை கேசு" "உனக்கு ஒன்னும் தெரியாது", "கிழடு", "வயதான காலத்துல சும்மா இருக்க மாட்டியா", "பெருசு" என மட்டம் தட்டி பேசுவது, இந்த அறிவுபெருத்த நவநாகரீக உலகத்தின் இயல்பாக இருக்கின்றது.

இதில் கொடுமை என்னவென்றால், இந்த மோசமான சுபாவம் கிறிஸ்துவை நம்புகின்ற பிள்ளைகளிடம் கூட இருப்பது தான். மரியாதை செலுத்த வேண்டியவர்களை மரியாதை குறைவாக மட்டம் தட்டி நடத்துவது என்பது, தேவ பயமற்ற செயல். மற்றும் அது தேவ தண்டனைக்குரிய செயல். பெரியவர்களிடம் மரியாதையுடன் பேசவேண்டும்; மரியாதையுடன் அவர்களை நடத்த வேண்டும்; அவர்களை அவமதிப்பது என்பது, அவர்களை மதிக்க சொன்ன வேதத்தையும், அதை தந்த தேவனையும் அவமதிப்பதாகும், என்பதை நினைவில் கொள்வோம்.

அவர்கள் பேசுவதை கவனிப்பது, அவர்களுக்கு முந்திக்கொண்டு வணக்கம் சொல்லுதல், கேள்வி கேட்டால் பொறுமையுடன் பதில் சொல்லுதல் போன்றவையும், நாம் செய்யும் மரியாதைக்குரிய செயல்களாகும். **1தீமோ 5:1-2** "முதிர்வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போலவும், பாலியபுருஷரைச் சகோதரரைப் போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப் போலவும், பாலிய ஸ்தரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப் போலவும் பாவித்து புத்திசொல்லு."

அவர்களை மரியாதையுடன் நடத்துங்கள், அவர்களிடம் மரியாதையுடன் பேசுங்கள், மற்றும் மரியாதையுடன் பழகுங்கள். வேதம் மறுபடியும் மறுபடியும் சொல்கிறது என்னவெனில், அவர்களை தூஷிக்காதீர்கள், அது உங்களுக்கே சாபமாக வந்து சேரும்! **உபா. 27:16** "தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்கள். ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்."

வயதில் பெரியவர்கள் கீழே அமர்ந்திருந்தால் நீங்கள் மேலே அமர்வது, அவர்களுக்கு எதிரே கால்மேல் கால் போட்டுக்கொண்டும் அமர்வது போன்றவை, மரியாதைக்குரிய செயல்களல்ல. இது எல்லாம் மிகவும் மரியாதை கெட்ட செயல்கள். நீங்கள் அவர்களுக்கு செய்யும் அவமரியாதை என்பது, நீங்கள் அவர்களுக்கல்ல, தேவனுக்கு செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்! சாமுவேல், தன்னை ஜனங்கள் புறக்கணித்துவிட்டனர் என சொல்லும்போது, தேவன், அவர்கள் உன்னை அல்ல

என்னை புறக்கணித்துவிட்டனர் என்கிறார். (1சாமு 8:7). அதினால் இஸ்ரவேல் ஜனங்கள் அடைந்த தோல்வி மிகவும் பெரியது.

### 2. கவனித்துக் கொள்ளுங்கள்!

வயதில் பெரியவர்களை கவனித்துக்கொள்ள வேண்டும். சாலமோன், தன் தகப்பனாகிய தாவீதின் வயதான காலத்தில் அவரை பராமரித்து, பார்த்துக்கொண்டான். ஈசாக்கு, தன் தகப்பனாகிய ஆபிரகாமை கவனித்துக்கொண்டான். ரூத், தன் மாமியாரை மிகவும் நேர்த்தியாக கவனித்துக் கொண்டதை நாம் அறிவோம்! ரூத் 1:16–17 "அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிபோவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்."

இன்றைய இந்தியாவில், ஒரு ஆய்வின் (Survey) புள்ளிவிவரப்படி, பெற்றோரில்லாமல் அநாதைகளான பிள்ளைகளைவிட, பிள்ளைகளால் அநாதையாக்கப்பட்ட பெற்றோரே அதிகம் என்கின்றனர். அதனால் தான், அநாதை இல்லங்களைவிட முதியோர் இல்லங்கள் பெருகிவிட்டது. இதனை நாம் கண்கூடாக காணலாம். பெற்றோர்கள், தாத்தா, பாட்டி ஆகியோர் பாரமாக கருதப்படுவது, மிகவும் வேதனையான காரியம்.

ஏசா 46:3–4 "யாக்கோபின் சந்ததியாரே இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்; தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்துவந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்."

தேவன் இஸ்ரவேலரை முதிர்வயதிலும் தூக்கி சுமப்பேன் என்கிறார். இதிலிருந்து முதியவர்கள் மீது தேவனுக்கான அக்கரையை நாம் அறிய முடியும். அந்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும், நமது பெற்றோரை, தாத்தா, பாட்டி போன்றவர்களை தூக்கி எறிபவர்களாக அல்ல, தூக்கி சுமப்பவர்களாக இருப்போம்! அவர்கள் வயது சென்ற போது, அவர்கள் நம்முடன் சேர்ந்திருக்ககூடாதபடி ஆயிரம் காரணங்களை தேடாமல், அவர்களோடு சேர்ந்திருக்க ''தேவ சித்தம்'' என்ற ஒரு காரணத்தை பிடித்துக்கொள்வோம். நாம் 'தேவனுடைய பிள்ளைகள்' என்பதை மறந்துவிட வேண்டாம்.

நாம் நடக்க முடியாத வயதில் அவர்கள் நம்மை தூக்கி சுமந்தார்கள்; அது கடமை மட்டுமல்ல, அது அவர்களது பேரன்பு. அந்த பேரன்பை நாமும் வெளிப்படுத்துவோம். அவர்கள் நல்லதை நமக்கு விதைத்திருக்கின்றனர்; நம்மால் நல்லதை அறுக்கட்டும். இல்லையெனில், நல்லதை விதைக்கும் பழக்கமே வேரற்று போகும். எரேமியா 2:21 "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சைச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத்திராட்சைச் செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன ?"

### 3. கவனித்து கேளுங்கள்!

நீதி 23:22 "உன்னைப் பெற்ற தகப்பனுக்கு செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும்போது அசட்டைபண்ணாதே.'' பெரியவர்கள் பேசும் போது காது கொடுத்து கேளுங்கள். அதனை அசட்டை செய்யாதீர்கள்! அவ்வாறு அசட்டை செய்வது புத்திசாலித்தனம் அல்ல; மாறாக, அதனை முட்டாள்தனம் என்கிறது பைபிள். நீதி 13:1 "ஞானமுள்ள மகன் தகப்பனுடைய போதகத்தைக் கேட்கிறான்;. பரியாசக்காரனோ கடிந்துகொளுதலுக்குச் செவிகொடான்."

எலிகூ, முதியவர்கள் பேசுவதை கவனித்து கேட்டான்; பொறுமையாக கவனித்தான். இது உண்மையிலேயே மிகவும் பாராட்டத்தக்க செயலாகும். யோபு 32:4, 6, 7 "அவர்கள் தன்னைப்பார்க்கிலும் வயது சென்றவர்களானபடியினால், எலிகூ யோபின் வார்த்தைகள் முடிந்து தீருமட்டும் காத்திருந்தான். ஆதலால் பரகேயலின் குமாரன் எலிகூ என்னும் பூசியன் பிரதியுத்தரமாக: நான் இளவயதுள்ளவன், நீங்களோ விருத்தாப்பியர்; ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்த பயந்திருந்தேன். முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும்

என்றிருந்தேன்."

வேதம் சொல்கிறதை நன்கு கவனியுங்கள், யோபு 12:12 "முதியோரிடத்தில் ஞானமும் வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே." முதியோரிடத்தில் ஞானமும் புத்தியும் இருக்கும் என நீங்களும் நானும் நம்புகிற பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. ஆகையால், "உனக்கெல்லாம் ஒன்னும் தெரியாது" என அவர்களை மட்டம் தட்டாதீர்கள். அப்படி செய்வது, நீங்கள் 'சத்தியமாக' விசுவாசிக்கிற வேதத்தை நீங்களே மட்டம் தட்டுவதாகும்.

முதியோரின் ஆலோசனையை தள்ளிவிட்ட, மிகப்பெரிய ஞானி சாலமோனின் மகன் ரெகோபெயாம், தன் ராஜ்ஜிய பாரத்திலிருந்து தள்ளப்பட்டதை மறந்துவிட வேண்டாம். அது மாத்திரமின்றி, அது அவனது வாழ்நாள் முழுதும் மிகப்பெரிய நஷ்டத்தை உண்டாக்கியது. 1 ராஜா 12:13, 16 "ராஜா முதியோர் தனக்குச் சொன்ன ஆலோசனையைத் தள்ளிவிட்டு, வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசி; ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் மறுஉத்தரவாக: தாவீதோடே எங்களுக்கு பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்திரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக்கொள் என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்கு போய்விட்டார்கள்."

### 4. கீழ்ப்படியுங்கள்!

பைபிள், மூப்பர்களுக்கு கீழ்படியுங்கள் என்கிறது. மேலும் அப்படி கீழ்படிவதுதான் தாழ்மையின் வெளிப்பாடு. அப்படிப்பட்ட தாழ்மையானவர்களுக்கு தேவன் கிருபைகளை வாரிவழங்குகிறார். 1பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

மேலும், உங்களை நடத்துகிறவர்களுக்கு கீழ்படிந்து அடங்குங்கள் என்று வேதாகமம் கூறுகின்றது. எபி 13:17 "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களால் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி அவர்களுக்கு கீழ்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே."

பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு கீழபடியுங்கள். அதுதான் நியாயம்! நீங்கள் நியாயமான காரணங்கள் சொல்லி, கீழ்படியாமல் போனாலும் அது அநியாயம் தான். எபே 6:1 "பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். இது நியாயம்."

வேதவசனத்திற்குள்ளாக, மற்றும் வேதவசனத்தின்படி நாம் கீழ்படிந்தே ஆக வேண்டும். ஈசாக்கை கவனித்து பாருங்கள். தன் தகப்பன் வார்த்தைக்கிணங்க பலிபீடத்தின் மேல் தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார் அல்லவா! (ஆதி 22). யெப்தாவின் மகளை குறித்து நாம் வேதத்தில் படிக்கிறது என்ன? அவள் தன் தகப்பனின் வேண்டுதலுக்கு இணங்க, தன்னையே பலியாக்கினாள் அல்லவா !(நியா 12).

'தேவன் எங்களுக்கும் அறிவை கொடுத்திருக்கிறார்' என பேசி கீழ்படியாமல் இருக்காதீர்கள். ஏனெனில் கீழ்படிதல் என்பது அடிமைத்தனமல்ல; மாறாக, அது ஒரு தெய்வீக சுபாவம்! சர்வவல்ல ஆண்டவர் இயேசு, இந்த பூமியில் மனிதனாக இருந்தபோது, மரணபரியந்தம் பிதாவாகிய தேவனுக்கு கீழ்படிந்திருந்தார். (பிலி 2:4-8).

நமது கீழ்படிதல் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கும், கிருபைகளுக்கும் நேராய் நம்மை வழிநடத்துவதாக இருக்கிறது. அதாவது

– அன்புடன், ஆசிரியர்

### சிறுவருக்கான கேள்விகள்

1. சாமுவேல், யாரை எப்படி கனம் பண்ணினார்?

2. ரெகோபெயாம் செய்த தவறு என்ன?

3. ஈசாக்கு எப்படிபட்டவராக இருந்தார்?

4. எஸ்தர் பேரரசி, யாருக்கு எப்படி கீழ்படிந்தார்?

5. இந்த பாடங்களிலிருந்து நீங்கள் கற்றது என்ன?

# முதிர்வயதிலும் கனி தந்து..



தங்கள் முதிர்வயதிலும் தங்களுடைய தேவனை கனப்படுத்திய இந்த தேவப் பிரியர்களைப் பற்றி சற்று யோசித்துப் பாருங்கள் : ஆபிராம் - 75, மோசே - 80, யோசுவா - மிகவும் வயது சென்றவர், காலேப் - 85, ஏலி - வயதானவர், சிமியோன், அன்னாள் - 84, லோவிசாள், பவுல் மற்றும் யோவான்.

வயதில் மூத்தவர்கள் தேவனை சேவிப்பதற்கான சவால் மிகவும் தெளிவாக வேதாகமத்தில் உள்ளது.

"இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும், முதிர்வயதும் நரைமயிருமுள்ளவனாகும் வரைக்கும் என்னைக் கைவிடீராக." **சங் 71:18**

''அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள்." **சங் 92:15**

"கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது" **சங் 103:5**

"நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுபடுவேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்." **சங் 104:33**

"தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்." **சங் 145:4**

"நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன்; நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்." **சங் 146:2**

இவ்வாறு மேலே குறிப்பிடப்பட்டபடி தேவனுக்கு சேவை செய்ய விரும்பும் முதியவர்களை புறக்கணிப்பது என்பது வேதாகமத்திற்கு எதிரானது. வயதானவர்களை புறக்கணிப்பது என்பது, அவர்களுக்கு சொல்லொன்னா வலியைத் தரும். ''நான் எதுக்குமே பிரயோசனமில்லை", "நான் செய்வதற்கு ஒன்றுமே இல்லை", "யாருக்குமே நான் தேவையில்லை", இதுபோன்ற வயதானவர்கள் கூறும் வார்த்தைகள் நம் இதயத்தை பிளக்கக் கூடியதாக இருக்க வேண்டும். வயதானவர்கள் தேவனுக்கு சேவை செய்ய அனுமதியுங்கள். அப்பொழுதுதான், அவர்களோ அல்லது நீங்களோ வயதின் காரணமான குற்ற உணர்வு இல்லாமல் இருக்கலாம்.



## இயேசுவின் போதனையை கவனியுங்கள் :

"நீங்களோ, ஒருவன் தன் தகப்பனையாவது தாயையாவது நோக்கி, உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டால் அவனுடைய கடமை தீர்ந்தது என்று சொல்லி, அவனை இனி தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது யாதொரு உதவியும் செய்ய ஒட்டாமல், நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்." **மாற்கு 7:11–13**

## பவுலடியார் பரிசுத்த ஆவியானவரினால் ஏவப்பட்டு எழுதுவதை கவனியுங்கள் :

''உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு. விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது, பேரன் பேத்திகளாவது இருந்தால், இவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபக்தியாய் விசாரித்து, பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளக்கடவர்கள்; அது நன்மையும் தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது." **1 தீமோ. 5: 3–4**

## இறுதியாக...

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக." **உபா 5:16**

– கிங்ஸ்லி ராஜா
(இணை ஆசிரியர்)

# ரூத் – அன்பின் சரித்திரம்




பேபி ராஜா

**அன்பான சகோதரிகளுக்கு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.**

பரிசுத்த வேதாகமத்தில், பெண்கள் பெயரில் அழைக்கப்படுகின்ற இரண்டு புத்தகங்களில் ஒன்று ரூத்தின் சரித்திரம். அதிலும் இந்த புத்தகத்திற்கு சிறப்பு உள்ளது. எஸ்தர் யூத பெண்; ரூத்தோ மோவாபிய பெண்.

நியாயாதிபதிகள் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தின காலத்தில், தேசத்திலே பஞ்சம் உண்டானபோது, பெத்லகேமை சேர்ந்த எலிமலேக்கு மோவாப் தேசத்திற்கு, தன் மனைவி நகோமி மற்றும் தனது இரு மகன்களுடன் பிழைக்க சென்றார். அங்கே அவர் மரித்த பிறகு, நகோமி தனது இரு மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்தார். பின்பு அவளது இரண்டு மகன்களும் இறந்து போயினர்.



நகோமி பெத்லகேமிற்கு திரும்பி செல்லவேண்டும் என்பதால், தன் இரண்டு மருமகள்களையும் அவர்களுடைய வீட்டிற்கு சென்று, அவர்களுக்கென்று நல்வாழ்வு அமைத்துக்கொள்ள அனுப்பிய போது, மூத்த மருமகள் ஓர்பாள் முத்தமிட்டு சென்றுவிட, இளைய மருகளாகிய ரூத்தோ செல்லாமல் நகோமியை பற்றிக்கொண்டு, அவளுடன் பெத்லகேம் வருகிறாள். இது நாம் அறிந்த சரித்திரம் தான். இதிலிருந்து, நமக்கான சத்தியம் என்னவென்று அறிந்துகொள்வோம்.

## 1. தனிமையில் துணையாக உடனிருந்தாள் !

**ரூத் 1:13–14** "அவர்கள் பெரியவர்களாகுமட்டும், புருஷருக்கு வாழ்க்கைப்படாதபடிக்கு நீங்கள் பொறுத்திருப்பீர்களோ? அது கூடாது; என் மக்களே, கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால், உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனமிருக்கிறது என்றாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள்."

இன்றைய நாட்களில் சில நேரங்களில், பெற்ற பிள்ளைகளே தகப்பனையும் தாயையும் பாரமாக நினைக்கிற உலகத்திலே, தன் புருசனும் மரித்து, தன் மாமியாருமாகிய நகோமி தன்னை தன்னைவிட்டு போய்விடும்படி கூறிய போதும், உறுதியாக ரூத் அவளை பற்றிக் கொண்டது மிகவும் பிரமிப்பான விஷயம். நிர்க்கதியாக நின்ற தன் மாமியாருக்கு துணையாக நின்றாள். அவளது அந்த வைராக்கியம் அவளது அன்பை வெளிப்படுத்துகிறது.

பெண்களாகிய நாம் எப்படி இருக்கிறோம். எந்த பெண்ணுக்கும் ஒரு ஆண் எதிரியாக இருப்பதில்லை. பெரும்பாலும் ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணே எதிராக இருப்பது வருத்தமான விஷயமல்லவா ? கர்ப்பிணி பெண்ணுக்கு பேருந்தில் இடம்தருவது கூட ஒரு ஆண்தான் என்றால், பெண்களே எங்கே போய்விட்டது நம் கருணை உள்ளம். மாமியாரை, மாமனாரை முதியோர் இல்லத்தில் சேர்க்க இருக்கும் ஆவல், நம் தாய் தகப்பனை சேர்க்க இருக்குமா ?

## 2. கசப்பில் இனிப்பாக உடனிருந்தாள் :

**ரூத் 1:19–22** "அப்படியே இருவரும் பெத்லகேம் மட்டும் நடந்துபோனார்கள்; அவர்கள் பெத்லகேமுக்கு வந்தபோது, ஊரார் எல்லாரும் அவர்களைக் குறித்து ஆச்சரியப்பட்டு, இவள் நகோமியா என்று பேசிக்கொண்டார்கள். அதற்கு அவள்; நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார்; கர்த்தர் என்னைச் சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தியிருக்கையில், நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள். இப்படி நகோமி மோவாபிய ஸ்தீரியான தன் மருமகள் ரூத்தோடுங்கூட மோவாப் தேசத்திலிருந்து திரும்பி வந்தாள். வாற்கோதுமை அறுப்பின் துவக்கத்தில் அவர்கள் பெத்லகேமுக்கு வந்தார்கள்."

தன் மாமியார் மகிழ்வாக இருந்தபோது மாத்திரமல்ல, அவள் வாழ்வு முற்றிலும் கசப்பானபோது, ரூத் அவளுக்கு இனிமையாக இருந்தாள். மேலும் அந்த கசப்பை தனது அன்பினால் மற்றும் பராமரிப்பினால் தித்திப்பாக மாற்றினாள். "கசந்த உள்ளத்தை தித்திப்பாக்கும் வல்லமை தூய்மையான அன்பிற்கு மட்டுமே உள்ளது."

கசப்பு என்பது, உள்ளம் மிகவும் நொந்துவிட்டது, உடைந்துவிட்டது, நொறுங்கிவிட்டது என்ற பொருளில் நகோமி பேசுகிறாள். உடைந்த உள்ளத்திற்கு கர்த்தர் சமீபமாயிருக்கிறார் என்று பைபிள் சொல்லுகிறது. சகோதரிகளே! அந்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் அவ்வாறு தானே இருக்க வேண்டும். இனி இழப்பதற்கு ஏதுமில்லை என நினைத்தாள் நகோமி. எந்த காலத்திலும் ஈடு செய்ய முடியாத முதலீடாக வந்து நின்றாள் ரூத். சகோதரிகளே, நாம் நமது செயல்களை சீர்தூக்கி பார்ப்போம். நிதானித்து நம்மை நாமே பரிசோதிப்போம். கர்த்தருக்கு பயப்படுகிற பயத்துடனே, முதியவர்களை அன்புடன் மற்றும் மரியாதையுடன் நடத்துவோம். அதுவே நம்மை குறித்த தேவ சித்தம்.

**லேவி 19:32** "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர்."

ரூத்தினுடைய இந்த சிறந்த பண்பினால், போவாஸ் என்ற மணவாளனை அவளது மாமியார், தாயாக இருந்து அமைத்துக் கொடுத்தாள். ரூத்தின் கர்ப்ப கனியாக ஓபேத்தும், அவனது வழியில் தாவீதும், அவனுடைய சந்ததியில் இயேசு கிறிஸ்துவும் வந்து பிறந்தார். என்ன ஒரு கிருபை பாருங்கள்! நாமும் ரூத்தைப் போல நடந்து, தேவனுடைய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

### சென்ற மாதம் விடுபட்டவர்கள்

1. A. ரோஸ்மேரி – சென்னை
2. R. பியூலா ரமேஷ் – வளர்நகர்
3. J. தாமஸ் ராபின்சிங் – பெரம்பலூர்
4. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
5. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
6. S.M. தேவி ராஜாசிங் – திருப்பூர்

ஒரு நிமிட வேத ஆராய்ச்சி:

## அறிக்கையிடுதல்

PAULA BATES

1. நீதியுண்டாக ....................விசுவாசிக்கப்படும்,.................... வாயினாலே .................... (ரோமர் 10:10).

2. நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் .................... ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக் 5:16).

3. ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில்.................... வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் ...................., பரிசேயர் நிமித்தம் அதை .................... (யோவா 12:42)

4. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் .................... ; .................... அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை .................... (வெளி 3:5)

5. நம்முடைய பாவங்களை நாம் ...................., பாவங்களை நமக்கு மன்னித்து .................... அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவா 1:9)

# கலைஞர் மு. கருணாநிதி

ஜூன் 3, 1924 - ஆகஸ்ட் 7, 2018

- முத்துவேல் கருணாநிதி அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ஜூன் 3ல், ஏழை இசை வேளாளர் குடும்பத்தில் முத்துவேலருக்கும், அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.



- தனது பள்ளிப் பருவத்திலேயே நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.
- தனது 14ஆவது அகவையிலேயே, சமூக இயக்கங்களில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.
- தனது வளரிளம் பருவத்தில், வட்டார மாணவர்கள் சிலரின் உதவியுடன் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை உருவாக்கினார். இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு பெரிதும் உதவியது.
- அவர் துண்டுப் பதிப்பாக தொடங்கிய 'முரசொலி' செய்தித்தாளாக, கட்சிப் பத்திரிக்கையாக உருவெடுத்தது. அதன் ஆசிரியராக கடந்த 75 ஆண்டுகளாக இருந்தவர் கலைஞர் கருணாநிதி ஆவார்.
- கருணாநிதி அவர்கள் தமிழ்த் திரையுலகில் கதை, உரையாடல் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்.
- 'தூக்குமேடை' நாடகத்தின் போது, எம். ஆர். ராதா இவருக்கு 'கலைஞர்' என்ற பட்டம் அளித்தார். இன்றும் அப்பெயராலேயே இவரது ஆதரவாளர்களால் அழைக்கப்படுகின்றார்.
- இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டத்துக்கு தலைமை தாங்கிய கருணாநிதி அவர்கள், நடுவண் அரசின் இந்தி திணிப்பை எதிர்த்து இவ்வாறு முழக்கமிட்டார். 'மொழிப்போராட்டம் எங்கள் பண்பாட்டை பாதுகாக்க, இது எமது மக்களின் தன்மானம் மற்றும் எங்களது கட்சியின் அரசியல் கொள்கை.'
- போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் இவர் வெற்றி பெற்றார். 1957ம் ஆண்டு சுயேச்சையாகவும், மற்ற அனைத்து தேர்தல்களிலும் திமுக வேட்பாளராகவும் போட்டியிட்டார்.
- கடந்த 50 ஆண்டுகளாக 'திமுக' வின் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றார். தமிழகத்தின் முதல்வராக ஐந்துமுறை கலைஞர் கருணாநிதி அவர்கள் பதவி வகித்துள்ளார்.
- 1969ல் முதன் முறையாக தமிழக முதல்வரானார். மே 13 - 2006ல், ஐந்தாவது முறையாக தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றார்.
- இவர் ஆகஸ்ட் 7ஆம் தேதி 2018ஆம் ஆண்டு, தன்னுடைய 94ஆம் அகவையில் காலமானார்.

**கலைஞர் கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் ...**

- **1967-69 ல்** மெட்ராஸ் மாகாணம் என்ற பெயரை தமிழ்நாடு என மாற்றினார் - சுய மரியாதை திருமணங்களுக்கு சட்ட அனுமதிக்கான தீர்மானம்.
- **1969-71ல்** போக்குவரத்து துறையை தேசிய மயமாக்கியது - குடிசை மாற்று வாரியம் - இலவச கண் மருத்துவ முகாம் திட்டம் - பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு திட்டம் - கை ரிக்ஷாவை ஒழித்தது - SC,ST மக்களுக்கான இலவச கான்கிரீட் வீடுகள் பிற்படுத்தப்பட்டோர், SC மக்களுக்கான தனி அமைச்சகம் - P.U.C வரை அனைவருக்கும் இலவச கல்வி - மே தினம் சம்பளத்துடன் விடுமுறை அறிவிக்கப்பட்டது.
- **1971-76ல்** ல், கோயம்புத்தூரில் முதல் விவசாய பல்கலைக்கழகம் - அரசு பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி - மீனவர்களுக்கான இலவச வீட்டு திட்டம் - கோவில்களின் குழந்தைகளுக்கான 'கருணை இல்லம் - சேலம் உருக்காலை - Sidco மனு நீதி திட்டம் - பூம்புகாரில் கப்பல் கழகம் - பசுமைப் புரட்சி.
- **1989-91ல்,** விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் நாட்டிலேயே முதன் முறையாக - பெண்களுக்கு சொத்தில் சமஉரிமைக்கான சட்டம் - அரசாங்க பதவிகளில் பெண்களுக்கு 30சதவீத ஒதுக்கீடு - கைம்பெண் (விதவை) மறுமணத்திற்கான நிதிஉதவி - கர்ப்பிணி பெண்களுக்கான நிதிஉதவி - மகளிர் சுயஉதவி குழுக்கள் -

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் – பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக்கழகம் – Dr.M.G.R மருத்துவ பல்கலைக்கழகம்

- **1996–2001ல்,** மெட்ராஸ் பட்டணம் 'சென்னை' என பெயர் மாற்றம் – நவீன சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் – 24 மணிநேர ஆரம்ப சுகாதார மையம் – சாதிப் பாகுபாட்டை களைய 'பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்' – கிராமப்புறங்களுக்காக 'மினி பேருந்து' திட்டம் – Dr. அம்பேத்கார் சட்ட பல்கலைக்கழகம் – உழவர் சந்தை திட்டம் – வருமுன் காப்போம் – கால்நடை பராமரிப்பு திட்டம் – பள்ளிகளில் வாழ்வொளி திட்டம் – சென்னையில் 'டைடல்' மென்பொருள் பூங்கா – கோயம்பேட்டில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் (ஆசியாவில் பெரியது) – தென்மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கான சிறப்பு திட்டங்கள் – தமிழ் அறிஞர்கள் மற்றும் தியாகிகளுக்கான மணிமண்டபங்கள் – சத்துணவு திட்டத்துடன் முட்டை – 20க்கும் மேற்பட்ட அணைகளை கட்டியது – ஒன்பது மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் – மதுரையில் உயர்நீதிமன்றம் கிளை – மாணவர்கட்கு இலவச பஸ் பாஸ் – நமக்கு நாமே திட்டம் – ரூ.104 கோடியில் சென்னை பொது மருத்துவமனை புதிய கட்டிடங்கள் – தமிழ் அறிஞர்களின் படைப்புகள் தேசிய உடைமையாக்குதல் – சென்னையில் 9 மேம்பாலங்கள் – ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பென்சன் திட்டம் – வேலூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரியில் மருத்துவ கல்லூரிகள் – தமிழ் இணையவழி பல்கலைக்கழகம்.
- **2006 – 2011ல்,** ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு – ரூ 50 க்கு 10 பொருட்கள் – 7000 கோடி கூட்டுறவு வங்கிக் கடன் விவசாயிகளுக்கு தள்ளுபடி (22 லட்சம் 40 ஆயிரத்து 739 குடும்பங்கள் பயன்) – 117 உழவர் சந்தைகள் புதிப்பிக்கப்பட்டு, 45 புதிய உழவர் சந்தைகள் – காமராஜர் பிறந்த நாளை, ' கல்வி வளர்ச்சி நாள்' என அறிவித்தது – ஒரு வாரத்திற்கு 5 முட்டை, வாழைப்பழம் என மதிய உணவு திட்டத்தில் – 10ம் வகுப்பு வரை எல்லா பள்ளிகளிலும் தமிழ் பாடம் கட்டாயம் – இலவச 108 அவசர ஆம்புலன்ஸ் திட்டம் – கோவை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலியில் டைடல் பார்க் – அருந்ததியர் சமூகத்திற்கு 3 சதவீத இட ஒதுக்கீடு – ஓமந்தூரார் அரசினர் மாளிகையில் புதிய தலைமைச் செயலக கட்டிடம் – சென்னையில் செம்மொழிப் பூங்கா – உலகத் தரத்தில் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம், கேட்டூர் புரத்தில் – ஜப்பான் வங்கி உதவியுடன் ரூ. 14,600 கோடியில் மெட்ரோ ரயில் திட்டம்.

இன்னும் பல...

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தேவ ஊழியரை கனம் பண்ணுதல்

கர்த்தருடைய செல்லங்களா, நீங்கள் எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா ? உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன். இன்று சூப்பரான பைபிள் சம்பவம் கற்றுக் கொள்ளலாமா ?

'அன்னாள்' என்ற அக்காவிற்கு ரொம்ப காலம் சென்று ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தைக்கு 'சாமுவேல்' என்று பெயர் வைத்தாங்க. அந்த பிள்ளைக்கு கொஞ்சம் விவரம் தெரிந்ததும் தேவாலயத்தில் கொண்டுபோய் விட்டுட்டாங்க. அந்த தேவாலயத்தில் ஊழியம் செய்யும் ஒரு வயதான தாத்தா இருந்தாங்க. யார் தெரியுமா ? அவர் பேர்தான் ஏலி. இவர் என்ன சொன்னாலும் சாமுவேல் அண்ணன் கேட்டு கீழ்படிவாங்க.

ஒருமுறை இரவு தூங்கும்போது, 'சாமுவேலே சாமுவேலே' என்ற சத்தம் கேட்டது. உடனே சாமுவேல் எழுந்து ஏலியிடம் போய், 'என்னை கூப்பிட்டீர்களா?' என்று கேட்டான். அதற்கு ஏலி, 'நான் உன்னை கூப்பிடவில்லை' என்று சொன்னார். சாமுவேல் போய் படுத்துக்கொண்டான். மீண்டும் 'சாமுவேலே' என்ற சத்தம் கேட்டது. மறுபடியும் எழுந்து ஏலியிடம் போய் 'என்னை அழைத்தீர்களா?' என்று கேட்டான். அதற்கு ஏலி நான் உன்னை அழைக்கவில்லை என்றார்.

மூன்றாம் முறையும் 'சாமுவேலே' என்று அழைக்கும் சத்தம் கேட்டது. உடனே ஏலியிடம் போய் 'என்னை கூப்பிட்டீர்களா?' என்று கேட்டான். ஏலி, கர்த்தர் சாமுவேலை கூப்பிடுகிறார் என்று அறிந்து, மீண்டும் இந்த மாதிரி சத்தம் கேட்டால், "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்று சொல்லு என்றார். 'நான் அப்படியே செய்கிறேன்' என்று சொன்னான். மேலும் ஏலி சொன்ன மாதிரியே செய்ததினால், கர்த்தர் சாமுவேலிடம் பேசி இனி நடக்கப்போகிற காரியங்களை அவனுக்கு அறிவித்தார்.

பாருங்கள் ! உங்களைப் போன்ற சிறுபிள்ளை தான் சாமுவேல். தன்னை வழிநடத்துகிற, கர்த்தருடைய ஊழியக்காரரை கனம் பண்ணி, அவர் சொன்னதிற்கு கீழ்படிந்தான். தேவன் சாமுவேலை பெரிய தீர்க்கதரிசியாக உயர்த்தினார். இராஜாவையே அபிஷேகம் பண்ணும் அளவுக்கு அவரை கர்த்தர் உயர்த்தினார். நீங்களும், உங்கள் சபை ஊழியர் மற்றும் பெரியவர்களை கனம் பண்ணனும். இந்த மாதிரி கீழ்படிந்து கனம்பண்ணுங்கள். கர்த்தர் உங்களையும் உயர்த்தி மகிமைப்படுத்துவார்.



**மனன வசனம் : எபி 13:17** "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியினால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே."

உங்கள் அன்பு அண்ணன்
அன்பு ஏசுதாஸ்

# முதியவரை கனம் பண்ணுதல்

ஹாய் குட்டீஸ் ! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். நாம் இந்த முறை 'ரெகோபெயாம்' என்ற ராஜாவிடமிருந்து, நமக்கு இருக்கக் கூடாத ஒரு குணத்தைப் பற்றி கற்றுக்கொள்வோமா ?

இஸ்ரவேல் நாட்டை, சாலமோன் ராஜாவுக்கு பிறகு அவருடைய மகனான ரெகோபெயாம் ஆட்சி செய்ய வந்தார். ஜனங்களெல்லாரும் ஒன்றுகூடி ராஜாவினிடத்தில் வந்து, 'ராஜாவே ! உம்முடைய தகப்பன் எங்கள் மேல் கடினமான வேலையையும், பாரமான வரிகளையும் சுமத்தினார்; நீங்கள் அவைகளை இலகுவாக்க (லேசாக்க) வேண்டும் என்று கேட்டார்கள். ராஜா உடனே அவர்களுக்கு பதில் சொல்லாமல் மூன்று நாளுக்கு பிறகு வாருங்கள், சொல்கிறேன் என அனுப்பிவிட்டான்.

மக்களுக்கு என்ன சொல்ல வேண்டும் என்பதை அறிய, ராஜா தன் தகப்பன் காலத்தில் இருந்த முதியவர்களிடம் ஆலோசனை கேட்டான். அதற்கு அவர்கள், 'நீங்கள் இந்த ஜனங்களுக்கு தயவை காண்பித்து, நல்ல வார்த்தைகளை உத்தரவாக சொன்னால், அவர்கள் என்றைக்கும் உமக்கு வேலைக்காரராக இருப்பார்கள்' என்று சொன்னார்கள்.

ராஜா தன்னோடே வளர்ந்த வாலிபர்களிடமும் இதைக் குறித்து ஆலோசனை பண்ணினான். அவர்கள் : 'நீ ஜனங்கள் சொல்வதைப் போல் செய்யாமல், அவர்கள் மீது வரியையும்,

வேலையையும் அதிகமாக சுமத்த வேண்டும்' என்று யோசனை சொன்னார்கள். ராஜாவாகிய ரெகோபெயாம் முதியவர்கள் சொன்ன ஆலோசனையை தள்ளி விட்டு, வாலிபர்கள் சொன்னபடி செய்தான். அதற்கு ஜனங்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ராஜாவிற்கு விரோதமாக கலகம் பண்ணி, யெரோபெயாம் என்பவனை தங்களுக்கு ராஜாவாக தெரிந்து கொண்டார்கள். ராஜ்ஜியம் வடக்கு மற்றும் தெற்கு என்று இரண்டானது.



ரெகோபெயாமின் நாட்கள் முழுதும் இரண்டு ராஜ்ஜியத்திற்கும் சண்டை நடந்துகொண்டே இருந்தது.

குட்டீஸ் ! நீங்கள் இந்த ரெகோபெயாம் ராஜவைப் போல இல்லாமல், உங்கள் பெற்றோர், சபை ஊழியர், தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்கள் சொல்லும் தேவனுடைய ஆலோசனையைக் கேட்டு அதின்படி நடங்கள். தேவனிடத்திலிருந்து நன்மையும், ஆசீர்வாதமும் பெறுங்கள்!

**மனன வசனம் : யோபு 12:12**

"முதியோரிடத்தில் ஞானமும், வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே."

— குமினி பிரதீப்

# பெற்றோரை கனம் பண்ணுதல்

செல்ல பிள்ளைகளுக்கு ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள்! இந்த மாதம் ஈசாக்கு என்கிற அண்ணனைப் பற்றி அறிந்து கொள்வோமா?

கானான் தேசத்தில், கேரார் என்னும் ஊரிலே ஈசாக்கு அண்ணன் இருந்தாங்க. அது சரி, இந்த ஈசாக்கு அண்ணன் யார்? தேவனுக்கு பயந்து அவருக்கு கீழ்படிந்து, விசுவாசமாக வாழ்ந்த ஆபிரகாமிற்கும், சாராளிற்கும் பிறந்த பிள்ளை. ஒரு வருடம், இரண்டு வருடமல்ல, இருபத்தைந்து வருடங்கள் காத்திருப்பிற்கு பின், தேவன் தந்த பரிசுதான் இந்த ஈசாக்கு.

ஈசாக்கு அண்ணன் பிறக்கும் போது, அவருடைய அப்பா ஆபிரகாமிற்கு ஏறக்குறைய 100 வயது, அவருடைய அம்மா சாராளிற்கு 90 வயது. ஆகையால் ஈசாக்கை மிகவும் செல்லமாக, அன்போடு, தேவனுக்கு பயந்து நடக்கிற பிள்ளையாக வளர்த்தாங்க. ஈசாக்கு அண்ணனும், அவருடைய அப்பா அம்மாவிற்கு அவர்கள் எது சொன்னாலும் செய்கிற, எப்பொழுதும் கீழ்படிகிற பிள்ளையாக இருந்தாங்க.

ஒரு நாள் தேவன், ஆபிரகாமை அழைத்து, 'மோரியா நாட்டில் நான் உனக்கு காண்பிக்கிற மலை ஒன்றில் உன் மகனை எனக்கு பலி கொடு' என்று சொன்னார். ஆபிரகாம் தேவனிடம், 'சரி செய்கிறேன்' என்று சொன்னார். அடுத்த நாள் அதிகாலையில், ஆபிரகாம் ஈசாக்கை அழைத்து, 'நாம் கர்த்தருக்கு பலி கொடுக்க போகலாம் வா' என்று கூப்பிட்டார். ஈசாக்கு அண்ணனும் சந்தோஷமாக அப்பாவுடன் சென்றார்.

கர்த்தர் சொன்ன மலை வந்தவுடனே, ஆபிரகாம் நெருப்பையும், கத்தியையும் எடுத்துக்கொண்டு, ஈசாக்கிடம் பலி கொடுக்க தேவையான விறகுகளை தூக்கிக்கொண்டு வர சொன்னார். ஈசாக்கும் அந்த விறகுகளையெல்லாம் தூக்கிக்கொண்டு அப்பாவின் பின் சென்றான். செல்லும் வழியில், 'அப்பா நெருப்பும், விறகும் இருக்கிறது; பலி கொடுக்க ஆடு எங்கே' என்று கேட்டான். ஆபிரகாம், 'தேவன் பார்த்துக் கொள்வார், நீ வா' என்று அழைத்து சென்றார்.

மலையிலே அவ்விறகுகளை அடுக்கி, அதன் மேல் ஈசாக்கை கட்டி, அதின் மேல் பலி கொடுக்க அவனை படுக்க வைத்தார். ஈசாக்கு அண்ணனும் தன்னையே பலியாகக் கொடுக்க, அவருடைய அப்பாவுக்கு கீழ்படிந்து, அந்த பலிபீடத்தில் விறகுகளின் மேல் படுத்தார். ஈசாக்கு அண்ணன் என்ன செய்தார் தெரியுமா ? அழவில்லை, அடம்பிடிக்கவில்லை மற்றும் அவருடைய அப்பவை எதிர்த்தும் பேசவில்லை; ஏனெனில், ஈசாக்கை பலியிட வேண்டும் என்பது தேவ கட்டளை.



செல்லங்களே ! நீங்கள் இருந்திருந்தா என்ன செய்திருப்பீங்க? ஈசாக்கைப் போல கீழ்படிந்திருப்பீர்களா? நிச்சயம் கீழ்படியனும்! அதுதான் தேவனுக்கு விருப்பமான காரியம். அதை செய்கிறவர்களை தேவனும் ஆசீர்வதிக்கிறார்.

**மனன வசனம் : எபேசியர் 6:1–3** "பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக"..

— பிரியா ஆண்டனி

# பெரியோர்களை கனம் பண்ணுதல்

(Ken Tyler)

ஹாய் செல்ல குட்டீஸ் ! உங்கள் எல்லோருக்கும் கிறிஸ்துவின் நாமத்தினாலே எனது வாழ்த்துக்கள்.

நாம் இந்த முறை பெரியவர்களை மதித்து நடந்த 'எஸ்தர்' பேரரசியை பற்றி தெரிஞ்சுக்கலாமா ?

இந்தியா முதல் எத்தியோப்பிய தேசம் வரைக்குமுள்ள 127 நாடுகளை, 'அகாஸ்வேரு' என்ற பேரரசன் ஆண்டு வந்தார். அவருடைய ராஜ்ஜியத்தில் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அடிமையாக கொண்டுபோகப்பட்ட யூதர்கள் இருந்தனர். மொர்தெகாய் அவர்களில் பேர்பெற்றவனாக இருந்தார்.

மொர்தெகாய் தன் சித்தப்பாவின் மகளாகிய எஸ்தரை, தனக்கு மகளாக வளர்த்து வந்தார். எஸ்தர், மொர்தெகாயை மிகவும் மதிப்பவளாக இருந்தாள். ஆகையால், எப்பொழுதும் மொர்தெகாயின் வழிகாட்டுதலின்படி நடந்து, அவனுக்கு கீழ்படிபவளாக இருந்தாள்.

அகாஸ்வேரு தனக்கு மனைவியை 127 நாடுகளிலிருந்து தேடியபோது, மொர்தேகாயின் சொற்படி நடந்து, அவனுக்கு கீழ்படிந்த எஸ்தர் பேரரசியாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். இது எவ்வளவு பெரிதான காரியம் பாருங்கள். ஒரு அடிமை அரசியாகிவிட்டாள் !

ஏனெனில் எஸ்தருக்கு தேவனுடைய கிருபை கிடைத்ததினால், அரசன் மற்றும் யாவரிடத்திலும் மனித தயவும் கிடைத்தது. இது, எஸ்தர், பெரியவர்கள் சொல்லும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்ததினால் கிடைத்தது.

எஸ்தர் பேரரசியாக ஆகும் முன்பு எப்படி மொர்தெகாய்க்கு கீழ்படிந்தாரோ, அது போலவே, பேரரசியான பின்பும் கீழ்படிந்தாள். 'ஆமான்' என்ற மந்திரி யூதர்களை அழிக்க முயன்ற சதியில், எஸ்தர் மொர்தெகாயின் சொற்படி கேட்டு, தன் உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணாமல் கீழ்படிந்ததினால், யூதர்கள் அனைவரும் காக்கப்பட்டனர்.

அன்பான குட்டீஸ் ! நாம் எந்த நிலைக்கு உயர்ந்தாலும், பெரியவர்களை மதிக்க வேண்டும். மற்றும் அவர்கள் சொல்லும் தேவ வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும். அப்படி செய்து தேவனுடைய கிருபையையும், அதினால் மனித தயவையும் பெற்றுக்கொள்வோம்! செய்வோமா ?

**மனன வசனம் : லேவி 19:32** "நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம் பண்ணி உன் தேவனுக்கு பயப்படுவாயாக; நான் கர்த்தர்."

– ஏஞ்சலின் கமலம்

## தினசரி வேத வாசிப்பு

| நாள் | வாசிப்புபகுதி | டிக் செய்யவும் |
|---|---|---|
| ஆகஸ்ட் 16 | ஏசாயா 37:30-40:31 | ☐ |
| ஆகஸ்ட் 17 | ஏசாயா 41-44 | ☐ |
| ஆகஸ்ட் 18 | ஏசாயா 45-49 | ☐ |
| ஆகஸ்ட் 19 | ஏசாயா 50-54 | ☐ |
| ஆகஸ்ட் 20 | ஏசாயா 55:1-60:9 | ☐ |
| ஆகஸ்ட் 21 | ஏசாயா 60:10 - 66:24 | ☐ |
| ஆகஸ்ட் 22 | எரேமியா 1:1-2:25 | ☐ |
| ஆகஸ்ட் 23 | எரேமியா 2:26-5:19 | ☐ |
| ஆகஸ்ட் 24 | எரேமியா 5:20-8:22 | ☐ |
| ஆகஸ்ட் 25 | எரேமியா 9 - 12 | ☐ |
| ஆகஸ்ட் 26 | எரேமியா 13:1-16:9 | ☐ |
| ஆகஸ்ட் 27 | எரேமியா 16:10 - 20:18 | ☐ |
| ஆகஸ்ட் 28 | எரேமியா 21-24 | ☐ |
| ஆகஸ்ட் 29 | எரேமியா 25-27 | ☐ |
| ஆகஸ்ட் 30 | எரேமியா 28:1-31:20 | ☐ |
| ஆகஸ்ட் 31 | எரேமியா 31:21-33:26 | ☐ |
| செப்டம்பர் 1 | எரேமியா 34-36 | ☐ |
| செப்டம்பர் 2 | 37:1 - 41:10 | ☐ |
| செப்டம்பர் 3 | 41:11 - 45:5 | ☐ |
| செப்டம்பர் 4 | 46-48 | ☐ |
| செப்டம்பர் 5 | 49:1 - 50:46 | ☐ |
| செப்டம்பர் 6 | 51:1 - 52:34 | ☐ |
| செப்டம்பர் 7 | புலம்பல் 1-5 | ☐ |
| செப்டம்பர் 8 | எசேக்கியல் 1-2 | ☐ |
| செப்டம்பர் 9 | எசேக்கியல் 3-8 | ☐ |
| செப்டம்பர் 10 | எசேக்கியல் 9-12 | ☐ |
| செப்டம்பர் 11 | எசேக்கியல் 13:1- 16:43 | ☐ |
| செப்டம்பர் 12 | எசேக்கியல் 16:44-20:17 | ☐ |
| செப்டம்பர் 13 | எசேக்கியல் 20:18-22:12 | ☐ |
| செப்டம்பர் 14 | எசேக்கியல் 22:13 - 24:27 | ☐ |
| செப்டம்பர் 15 | எசேக்கியல் 25:1 - 28:10 | ☐ |

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங் 1:2)

## ஆகஸ்ட் மாதக் கேள்விகள்

1. பவுல், தகப்பனை போலவும் தாயை போலவும் யாரை பாவித்து நடத்த வேண்டும் என்கிறார்?

2. எபிரெய ஆசிரியர் யாருக்கு கீழ்படிந்து அடங்குங்கள் என்கிறார்?

3. முதியோர் தனக்கு சொன்ன ஆலோசனையை தள்ளிவிட்ட அரசன் யார்?

4. ஞானமுள்ள மகன் எதை கேட்கிறான்?

5. யாருக்கு முன்பாக எழுந்து நின்று, யாருடைய முகத்தை கனம்பண்ண வேண்டும்?

6. நன்றாயிருப்பதற்கும், பூமியில் வாழ்நாள் நீடிப்பதற்கும் என்ன செய்ய வேண்டும்?

7. தன் தகப்பனையும், தாயையும் தூஷிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

8. முதியோரிடத்தில் ஞானமும், வயது சென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே என வாசிப்பதெங்கே?

9. எலிகூ, எதினால் அஞ்சி அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை என்கிறார்?

10. முதியவர்களின் மகிமை எது?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-09-2018**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**

45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. எபி 10:32 | 6. சங் 50:15 |
| 2. அப் 8:1 | 7. மத் 5:39 |
| 3. அப் 14:22 | 8. 2 கொரி 12:10 |
| 4. எபி 12:2 | 9. 1கொரி 6:7 |
| 5. யாக் 1:3 | 10. யாக் 1:12 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
2. Sis S. லில்லி புஷ்பம் – தூத்துக்குடி
3. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
4. Mrs. ஹெப்சிபா தாமஸ் – படப்பை
5. Mrs. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
6. AG. சாமுவேல் – தூத்துக்குடி
7. Mrs. ரூபி ஜெயராஜ் – மதுரை
8. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
9. Mrs. காந்தா மனோகரன் – திண்டுக்கல்
10. Mrs. ஜேம்ஸ் – திண்டுக்கல்
11. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – ஒத்தக்கடை
12. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
13. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
14. Mrs.P. இந்திரா பாண்டி – திருமங்கலம்
15. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
16. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
17. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
18. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
19. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
20. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
21. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – மதுரை
22. R. பால் ஜெயராஜ் – சென்னை
23. Mrs. மேரி ராஜ் – மதுரை
24. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
25. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
26. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
27. Mrs. ஞானசிரோன்மணி – சமயநல்லூர்
28. Mrs. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
29. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
30. G. ஏஞ்சலம்மாள் – ஒத்தக்கடை
31. J. விஜய் – ஒத்தக்கடை
32. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
33. S. டேவிட் சாந்தகுமார் – நெல்லை
34. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
35. கிறிஸ்டி ஜோசப் – நெல்லை
36. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
37. A. ரோஸ்மேரி – சென்னை
38. R. பியூலா ரமேஷ் – வளர்நகர்
39. M. ஈஸ்வரி முருகன் – கரூர்
40. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
41. U. ஜாய்ஸ் ராணி சந்தோஷ் – சென்னை

# பார்வையற்றோர் மத்தியில் பரமனின் பரிசுத்த பணி
## ஜூலை, ஆகஸ்ட் - 2018










மதுரை அன்னை சத்யா நகரில் நடைபெற்ற பார்வையற்றோர் வேதாகம முகாம்
மற்றும் பார்வையற்றோர்க்கான சபை கட்டிட திறப்பு விழா






பார்வையற்றோருக்கென அறிமுகமாகியுள்ள
சமிக்கை (signal) மற்றும் ஒலி (sound) தரும்
ஊன்றுகோல் (Walking Stick).
அன்பு உள்ளம் கொண்டோரே!
புற ஒளி இழந்த இந்த ஏழை பார்வையற்றோருக்கு,
இயேசுவின் வசனத்தினால்
கிடைக்கும் அக ஒளியுடன்
உங்கள் அன்பையும் பெற்றுகொள்ள
நீங்களும் உதவலாமே!

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th August 2018
Posted at Arasaradi HPO on 10th, 11th August2018

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்

அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்








அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!



இம்மாதம் ஏழை பார்வையற்றோருக்கும் திக்கற்ற விதவைகளுக்கும் அரிசி வழங்கப்பட்டது.

## கைபிரதிகள்


உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers